**மாத்தறை பல்கலைக்கழக கல்லூரி – 2017**

-------------------------------------------------------------------

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் மாத்தறை பல்கலைக்கழக் கல்லூரியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்கத் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்டோபர் 03 ஆந் திகதிய 1882/51 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. இது தொடர்பான விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகக் கல்லூரியின் பணிப்பாளருக்கு 2018 மே 10 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம்

நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கப்பட்ட ரூபா 459,425 தொகையான விளம்பரச் செலவினம் உண்மையாகவே கல்லூரி தொடர்பாக ஏற்பட்டதா என கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு உரிய மூல ஆவணங்கள் மற்றும் ஏனைய சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 381(1) | அலுவலக வங்கிக் கணக்கொன்று ஆரம்பிப்பதற்காக திறைசேரிக்கு விண்ணப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் கல்லூரியின் வங்கி நடைமுறைக் கணக்கு ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 386(4) | வழங்கப்பட்ட ஒவ்வொரு காசோலையும் செல்லுபடியான கால எல்லைக்குள் அது எழுதப்பட்ட திகதி முதல் 30 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன் அது தொடர்பாக அக்காசோலையின் முன் பக்கத்தில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். எனினும், கல்லூரியால் ஆரம்பத்திலிருந்து பயன்படுத்தப்பட்ட காசோலைகளின் செல்லுபடிக்காலம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 386(6) | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் அனைத்து காசோலைகளும் குறுக்குகோடு இடப்பட வேண்டிய போதிலும் கல்லூரியின் ஆரம்பத்திலிருந்து திறந்த காசோலைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |

(iv) நிதிப்பிரமாணம் 751 — ரூபா 4,289380 பெறுமதியான 118 பொருட்கள் மற்றும் உபகரணங்கள் உருப்படிகள் உரிய பிரிவுகளின் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

------------------------

### 3.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழக கல்லூரியின் நிதி விளைவுகள் ரூபா 6,356,875 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,223,799 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 8,580,674 ஆன வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டெழும் செலவினத்திற்கான அரசின் மானியம் ரூபா 2,338,317 ஆல் குறைவடைந்த போதிலும் ஏனைய வருமனம் மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் காலக்கழிவு மொத்தம் ரூபா 3,040,053 ஆல் அதிகரித்தமை காரணமாக செயற்பாட்டு வருமானம் ரூபா 701,736 ஆன அதிகரிப்பொன்றை காண்பித்த போதிலும் உள்ளவாறான செலவினம் ரூபா 9,282,410 ஆல் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 02 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டின் போது பற்றாக்குறையும் 2016 ஆம் ஆண்டின் போது மிகையும் 2017 ஆம் ஆண்டின் போது மீண்டும் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்ததன் பின்னர் நிறுவனத்தின் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டில் பங்களிப்பு அதிகரித்து மீண்டும் 2017 ஆம் ஆண்டின் போது பங்களிப்பில் குறைவொன்று தென்பட்டது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 47,013,252 தொகையான பங்களிப்பு 8 சதவீதத்தினால் குறைவடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 43,423,410 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

### 4.1 செயலாற்றல்

----------------------

#### 4.1.1 திட்டமிடல்

-------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று வருட காலப்பகுதிகான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட கல்லூரியினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடுகளும் மீளாய்வும்

------------------------------------------------

(அ) உணவு தொழில்நுட்ப பிரிவின் மாணவர்களின் செய்முறை பயிற்சி செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 6,903,573 பெறுமதியான மேலும் 19 உபகரணங்கள் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் அவற்றை நிறுவுவதற்கான வசதிகள் ஆய்வுகூடத்தில் காணப்படாமையால் அந்த உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தானியங்கி மோட்டார் வாகன தொழில்நுட்பம் உணவு தொழில்நுட்பம், விருந்தோம்பல் சேவை முகாமைத்துவம் மற்றும் குளிரூட்டல் மற்றும் காற்றுச்சீராக்கி தொழில்நுட்பம் ஆகிய 05 டிப்ளோமா பாடநெறிகளுக்காக மூன்றாம் நிலை ஆணைக்குழுவின் அங்கீகார சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 05 பாடநெறிகளை பின்பற்றும் 23 இறுதியாண்டு மாணவர்கள் காணப்பட்டதுடன் அம்மாணவர்கள் 2018 யூலை மாதத்தில் டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது.

(இ) கல்லூரியால் செயற்படுத்தப்படும் ஒவ்வொரு பாடநெறிக்காகவும் 30 மாணவர்கள் வீதம் அனுமதிக்க கூடியதாக இருந்த போதிலும் 04 பாடநெறிகளுக்காக 2017 ஆம் ஆண்டில் 89 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதற்கிடையே (cosmotology) பாடநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை 10 பேராக மாத்திரம் இருந்ததுடன் இப்பாடநெறி தொடர்பில் மாணவர்களை கவருவதற்கான நடைமுறையொன்று கல்லூரி மூலம் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகுதியிடமிருந்து 2017 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டிருந்த இறுதி மாணவர் தொகுதி வரையான 630 மாணவர்களில் 105 பேர் 2018 மார்ச் 31 ஆந் திகதி அளவில் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர்.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கல்லூரியில் கல்வி பயின்று வந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 525 ஆக இருந்ததுடன் அவர்களுக்கு விரிவுரை மண்டபம் மற்றும் ஏனைய வசதிகள் போதியளவில் இல்லாமை காரணமாக 0.6608 ஹெக்டேயார் அளவிலான அண்மையிலுள்ள காணியை கல்லூரிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மே 30 ஆந் திகதி வரையிலும் அந்நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்லூரி அமைந்துள்ள 0.5854 அளவிலான காணி மற்றும் கட்டிடங்கள் 2018 மே 08 வரை அமைச்சினால் கல்லூரிக்கு கையளிக்கப்படாமையால் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க முடியாதிருந்தது. மேலும், இந்தக் காணி அளவிற்குரிய 688 மற்றும் 688/1 ஆம் இலக்க வீதவரி இலக்கங்களை கல்லூரியின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மாத்தறை மாநகர சபையினால் உணவு ஆணையாளரின் பெயரில் வீதவரி பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2017 ஒக்தோபர் 02 ஆந் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த தலைமை நிறைவேற்று உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்த மாதாந்த ஊழியப்படியான ரூபா 100,000 இற்குரிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு கல்லூரியின் பங்களிப்பான ரூபா 15,000 தொகை உரிய உத்தியோகத்தரின் வேண்டுகோள் மற்றும் சபை தீர்மானத்தின் பேரில் அந் நிதியங்களுக்கு அனுப்பி வைக்கப்படாமல் படிகளைச் சேர்த்து நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் முதல் 2018 சனவரி வரை அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த பங்களிப்புத் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 60,000 ஆக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 08 ஆண்டுகளுக்குரித்தாக 19 பொருள் உருப்படிகளில் மிகையொன்றும் 31 வகைகளுக்குரிய 77 பொருள் உருப்படிகளில் பற்றாக்குறை காணப்பட்டன.

**4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்**

வெளிவாரி விரிவுரையாளர்களால் கோட்பாடு மற்றும் செய்முறை விரிவுரைகளை நடாத்துவது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாடத்திட்டம் (Lesson Plan) இன் பிரகாரம் 09 பாடநெறிகளுக்காக 2017 ஆம் ஆண்டில் 4,071 கோட்பாட்டு விரிவுரை மணித்தியாலங்களும் 2,090 செய்முறை பயிற்சி விரிவுரை மணித்தியாலங்களும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டில் முறையே 2,868 மற்றும் 844 விரிவுரை மணித்தியாலங்கள் மாத்திரமே மேவுகை செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் கோட்பாடு மற்றுத் செய்முறை பயிற்சி விரிவுரை மணித்தியாலங்கள் முறையே 1,203 மற்றும் 1,246 அதாவது 30 சதவீதம் மற்றும் 60 சதவீதத்தை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) NVQ 06 பாடநெறியில் முதலாவது தவணைக்காக (Quantity Surveying Practice) தலைப்பிற்குரிய நடாத்தப்பட வேண்டியிருந்த கோட்பாடு மற்றும் செய்முறை விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 90 மற்றும் 10 ஆக இருந்த போதிலும் ஆண்டின் போது எவ்வித விரிவுரைகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) NVQ 5 பாடநெறியின் இரண்டாவது தவணை மற்றும் NVQ 6 பாடநெறியின் முதலாவது தவணைக்காக Event promotion and public Relations மற்றும் Planning work to be performed of work place என்ற தலைப்பிற்காக நடாத்தப்பட வேண்டியிருந்த கோட்பாடு மற்றும் செய்முறை விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை முறையே 38 மற்றும் 27 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எவ்வித விரிவுரைகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) NVQ 6 பாடநெறியின் முதலாவது தவணைக்காக Event Leadership and Communication தலைப்பிற்குரியதாக நடாத்தப்பட வேண்டிய கோட்பாட்டு விரிவுரை மணித்தியாலங்கள் எண்ணிக்கை 20 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எவ்வித விரிவுரைகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) கல்லூரியில் வெளிவாரி விரிவுரையாளர்களாக 11 பேர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் நியமனக் கடிதங்கள் மாத்திரம் தனிப்பட்ட கோவைகளில் வைக்கப்பட்டிருந்த போதிலும் கல்வி மற்றும் தொழில் தகைமைகளை உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் எதுவும் அதில் காணப்படவில்லை. மேலும், 2017 மே 29 ஆந் திகதி வரை எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும் வகையில் நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அக்கடிதங்களில் நியமனம் முடிவடையும் திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 727,120 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்யப்படாத வழங்குனருக்கு ரூபா 94,842 ஆன பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஆங்கில மொழி பிரிவிற்காக ரூபா 1,636,286 பெறுமதியான 6 சுய கல்வி கணனி மென் பொருட்கள் 2016 யூன் 10 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அம் மென்பொருட்கள் 11 கணனிகளில் நிறுவப்பட்டுள்ளதாக பாடநெறி பொறுப்பாளரால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் 27 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவ்வாறு கணனிகளில் மென்பொருட்கள் நிறுவப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4.5 விளைவற்றுக் மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 18,931,596 பெறுமதியான 09 இயந்திரங்கள் மற்றும் உபகரண உருப்படிகள் 2 ஆண்டு முதல் 4 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக விளைவற்ற வகையிலும் குறைபயன்பாட்டுடையதாகவும் காணப்பட்டன. மேலும், மாணவர்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக 2014 நவம்பர் 20 ஆந் திகதி வரிசை அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்ற 810 ரீசேட் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் வழங்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ஆ) கல்லூரியின் உணவு தொழில்நுட்ப (Food Technalogy) மற்றும் தன்னியக்க வாகனத் தொழில்நுட்ப (Automobile Technology) ஆகிய பிரிவுகளில் மாணவர்களின் செய்முறை பரீட்சை நடவடிக்கைகளுக்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற ரூபா 4,761,510 பெறுமதியான வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு போதியளவு மின் வசதிகள் இல்லாமையால் 2018 மார்ச் 31 வரையிலும் அந்த உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கல்விசார் பதவியணியினர்**

2015 ஆம் ஆண்டிலிருந்து 08 விரிவுரையாளர் பதவிகளும், 04 தற்காலிக காட்சிப்படுத்துனர் பதவிகளும் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2018 மார்ச் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கல்விசார் பதவியணியினர்**

மீளாய்வாண்டில் கல்லூரியின் பதிவாளர் உட்பட 05 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2018 மார்ச் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடையாமை

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்’’ 2030 பிரகாரம், கல்லூரி அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அந்த இலக்குகளை நோக்கி அடைந்துகொள்வதற்கு இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பிடுவதற்கான சுட்டிக்காட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் கல்லூரியில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 6.2 கணக்காய்வுக் குழு

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கல்லூரியால் கணக்காய்வு குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2017 ஆம் ஆண்டிற்கான கல்லூரியினால் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த பாதீடு 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதி திருத்தப்பட்டிருந்ததுடன் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 15 சதவீதம் முதல் 185 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்லூரியின் பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்ட இரண்டாவது குழுவிடமிருந்து பணம் அறவிடப்படாமல் பாடநெறிகள் நடாத்திச் செல்லப்பட்டு வருவதுடன் முதலாவது மாணவர் குழுவிடமிருந்து அறவிடப்பட்டிருந்த வரிசை அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 1,227,000 தொகை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எத்தகையது என 2016 ஏப்ரல் 28 ஆந் திகதிய UCMT/ADM/CEO/SS/2016/03 ஆம் இலக்க கடிதம் மூலம் வரிசை அமைச்சிடம் வினவப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அதற்குதிய பதில் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) (i) 2014 பெப்ரவரி 10 ஆந் திகதிய DMS/1670 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதம் தேசிய தொழில்தகைமை (NVQ) 7 ஆம் கட்டத்தினை விட குறைந்த கட்டங்களுக்காக பயன்படுத்த முடியாதென குறிப்பிடப்பட்டிருக்கையில் 5 மற்றும் 6 ஆம் கட்ட பாடநெறிகளுக்காக அந்த விகிதத்தைப் பயன்படுத்தி 25 வெளிவாரி விரிலுரையாளர்களுக்கு விரிவுரை மணித்தியாலமொன்றுக்கு ரூபா 1,500 வீதம் 1640 விரிவுரை மணித்தியாலங்களும் செய்முறை மணித்தியாலமொன்றுக்கு ரூபா 750 வீதம் 859 செய்முறை பயிற்சி மணித்தியாலங்களுக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 3,105,188 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) அவ்வாறே மீளாய்வாண்டின் போது 2668 விரிவுரை மணித்தியாலங்கள் மற்றும் 844 செய்முறை மணித்தியாலங்களுக்காக மேற்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில் விரிவுரை மணித்தியாலமொன்றுக்கு ரூபா 1,500 மற்றும் செய்முறை மணித்தியாலமொன்றுக்கு ரூபா 600 வீதம் மொத்தம் ரூபா 2,630,524 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும்,

கொடுப்பனவு செய்யப்படாத உறுதிச்சீட்டுகளுக்காக ரூபா 684,105 ஆன அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது, மேலும் அட்டுறு விரிவுரைக் கட்டணங்களுக்காக ஒதுக்கீடாக ரூபா 1,793,100 ஆன கருதுகோள் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது,

## 6.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

கல்லூரிக்குள் உணவுப் பொருட்களை எடுத்து வரும் போது பிளாஸ்டிக், பொலித்தீன் பைகள் மற்றும் உணவு சுற்றும் இலைகளுக்காக வேறு பொதியிடல் முறை தொடர்பில் பதவியணியினர் மற்றும் மாணவர்கள் போதியளவு அறிவூட்டப்பட்டு அது தொடர்பாக ஊக்குவிக்கப்படாதிருந்ததுடன் பிளாஸ்டிக், பொலித்தீன் பயன்பாடு இடம் பெறுவதால் நேரடி மற்றும் மறைமுக சுகாதார, சுற்றாடல் மற்றும் சமூக தாக்கங்களை குறைப்பதற்காக அரச நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை யெற்படுத்துவது தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | காணி மற்றும் கட்டிடத் தொகுதியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்காமை மற்றும் சில ஆதனங்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை. |
| (ஆ) கணக்கீடு | திட்டவட்டமாக இனங்காணப்பட்டிருந்த செலவினம் அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்படாமல் கணக்குகளில் அட்டுறு செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை. |
| (இ) வங்கிக் கணக்குகளை பேணுதல் | அங்கீகாரமில்லாமல் நடைமுறைக் கணக்கு ஆரம்பித்தல் மற்றும் குறுக்குகோடு இடப்படாத காசோலை பயன்படுத்துதல். |
| (ஈ) பதவியணியினர் முகாமைத்துவம் | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) பாதீட்டுக் கட்டுப்பாடு | திட்டவட்டமான எதிர்வுகூறல் இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தமை |